முருகப்பெருமான் துணை

# மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.04.2023, புதன்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
   தருமனாக வாழும் தேசிகனே
   அவதாரம் ஆறுமுகனார் வடிவாக
   அமைந்தும் எளிமை குன்றா வழிநடத்தும்
2. வழிநடத்தும் ஞான வள்ளலே
   வையகத்தில் உன் பெருமை கூறி
   தெளிவூட்டி பெண்மைக்கும் ஞானம்
   தொடர்பூட்டி அழியாமை வாய்ப்பு உண்டென
3. உண்டென உயர்வூட்டும் உன்
   உயர் நெறி தெய்வநெறி போற்றி
   கண்டுரைப்பேன் அனுகூல ஆசி
   கணக்காய் சுபகிருது சேல் திங்கள்
4. திங்களிலே இருபான்நவதிகதி புந்திவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 29 ம் நாள், 12.04.2023, புதன்கிழமை)
   தெரிவிப்பேன் திருமங்கை ஆழ்வாரும்
   ஓங்கார உலகமாக உரைப்பேன்
   ஓங்கார குடில் படைத்து அருளும்
5. அருளும் அரங்கமகா ஞானியின்
   ஆற்றல் மிக்க சன்மார்க்க நெறி
   அருளை ஆண்பெண் பேதமின்றி
   அனைவருக்கும் சமமாக அருளிவர
6. வருகவே நித்ய பூசையாக
   வணங்கி ஞானிகள் தனை
   தருமபலமோடு செபதபம் ஆக
   தரணியில் தொடர்ந்து செய்து வர
7. வருகவே ஞான வாழ்வாக
   வாழ்க்கையில் ஆற்றல் கூடி
   தருகின்ற தரும குணமும் மனமும்
   தயவான தாயாக அவரவரும் தேறி

8. தேறியே அரங்கன் தேடலில்
தொண்டுடன் சரணாகதி கூடி
அரிவையர் அவரவர் தனக்கும்
அளவிலா சக்திநிலை பெருகி
9. பெருகியே நவகோடி ஞானியரில்
பெண்களும் கலந்து சிறப்பர்
தருமவான் அரங்கன் படைகளுள்
தக்க மகா சக்திகளாக நிரம்பி
10. நிரம்பி பெரும் பங்களிப்பை
நிலவுலகில் சேவையாகத் தந்து
அருந்தவசி அரங்கன் ஆசிபட
ஆறுமுகனாரின் ஒளிகாட்சி கிட்டி
11. கிட்டியே ஞான ஆட்சி எனும்
குருவரங்கன் அவதார நோக்கம்
தட்டாது நிறைவேற்றி மண்ணில்
தனிப்பெருஞ் சக்திகளாக வாழ்வர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—